# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2017.11.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

***2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் 6அ என்னும் பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் நடைமுறைக்கிடுதல் காலத்தின் ஏதேனும் காலநீடிப்பொன்றின் மொத்த காலப்பகுதிக்கென நான்கு ஆண்டுகளை விஞ்சாது ஏற்பாடுகளை செய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்து வதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, "சட்டத்துறைத் தலைமையதிபதி", "பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறு" மற்றும் "பொலிசு நிலையமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்" ஆகிய சொல்லமைப்புக்களை வரையறுப்பதற்காகும்.

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

ச. வ.- ஓ 47/2017

### 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரை அணுகுவதற்குச் சட்டத்தரணியொருவருக்குள்ள உரிமை.*

6அ. (1) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவர், அத்தகைய ஆள் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட நேரத்திலிருந்து, இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அத்தகைய ஆள் எந்தப் பொலிசு நிலையத்தில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அப்பொலிசு நிலையத்துக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பொலிசு நிலையத்துக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கும் முறையீடுகளைச் செய்வதற்கும் சட்டத்தரணியொருவருக்குள்ள உரிமை, பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற ஆள் தொடர்பில் நடாத்தப்படக்கூடிய புலனாய்வுகளைப் பாதித்தலாகாது.

2-PL 010433 - 475 (2017/11)

(3) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி அத்தகைய பொலிசு நிலையத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிசு நிலையத்தைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களினால் அவர் உளப்பூர்வமாகவும் நயமாகவும் நடாத்தப்படுதலும், நியாயமானதும் பொறுமையானதுமான கேட்பு அவருக்கு அளிக்கப் படுதலும் வேண்டும்.

(4) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி, பொலிசுக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட ஆளின் சார்பில், பொலிசு நிலையத்துக்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரைச் சந்திப்பதற்கும் பின்வரும் தகவல்களை அத்தகைய அலுவலரிடமிருந்து நிச்சயித்துக்கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளினால் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட தவறு;

(ஆ) அத்தகைய ஆள் கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்;

(இ) அத்தகைய ஆளை நீதிவானொருவர் முன்னர் நிறுத்திய தேதியும், அண்ணளவான நேரமும், இடமும் ; அத்துடன்

(ஈ) எந்த வேறெவையேனும் தகவல்களை வெளியிடுதல், மேற்கொண்ட புலனாய்வுகளின் நடாத்துகையையும் நீதிநலன்களையும் பாதகமானமுறையில் பாதிக்க மாட்டாதோ அந்த வேறெவையேனும் தகவல்கள்.

(5) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு பொலிசுக் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டிருக்கும் அத்தகைய ஆளின் சார்பில் முறையீடுகளைச் செய்தல் ;

(ஆ) 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளுக்காகப் பிணையளிப்பதனை நாடி, பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்; அத்துடன்

(இ) உட்பிரிவுகள் (6), (7), (8), (9) மற்றும் (10) இல் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறாக பொலிசுக் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஆளுக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல்.

(6) எவரேனும் அத்தகைய சட்டத்தரணி, அவர் அவ்வாறு கோரினால், பொலிசுக் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள ஆளுக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய அணுக்கத்துக்கான உரிமையைப் பிரயோகிக்க நாடுகின்ற நேரத்தில் அதனைப் பிரயோகித்தலாகாது.

(அ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றுடன் சம்பந்தப்பட்ட சான்றை அழித்துவிடுவதற்கு,

அதனுடன் தலையிடுவதற்கு அல்லது அதற்குத் தீங்குவிளைவதற்கு இட்டுச் செல்லலாம் அல்லது அத்தகைய தவறுபுரிதல் தொடர்பிலான நிகழ்வு களையும் சூழ்நிலைகளையும் அறிந் திருக்கக்கூடிய வேறு ஆட்களுக்கு அச்சுறுத்தலை அல்லது உடலூறு பாட்டை விளைவிக்கலாம்; அல்லது

(ஆ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றை அல்லது அதே கொடுக்கல்வாங்கலின்போது புரியப் பட்ட வேறேதேனும் தவறைப் புரிந் துள்ளோரெனச் சந்தேகிக்கப்பட் டோரும் கைதுசெய்யப்பட்டிரா தோருமான வேறு ஆட்களை அது குறித்து கவனஞ்செலுத்துவதற்கு இட்டுச்செல்லலாம்; அல்லது

(இ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றைப் புரிந்தமையினூ டாகப் பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தை அல்லது அதன் பெறுமதியை அல்லது அதன் பாகத் தின் பெறுமதியை அடையாளங் காண்பதற்கு, அமைவிடத்தைக் கண்டறிவதற்கு அல்லதுமீட்டுப் பெறுவதற்குத் தடங்கலாக இருக்கலாம் ; அல்லது

(ஈ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றைப் புரிவதில் பயன்படுத் தப்பட்ட ஏதேனும் ஆயுதத்தை அல்லது வேறு துணைப் பொருட் களை அடையாளங் காண்பதற்கு, அமைவிடத்தைக் கண்டறிவதற்கு அல்லது மீட்டுப் பெறுவதற்குத் தடங்கலாக இருக்கலாம்,

என பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின், அத்தகைய அணுக்கம் தாமதிக்கப்பட லாம்.

(7) சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக, எப்பட்சத்திலும், பொலிசுக் கட்டுக் காப்பிலுள்ள ஆள் எக்காலப்பகுதியினுள் நீதிவானொருவர் முன் நிறுத்தப்படவேண்டுமோ அக்காலப்பகுதி முடிவுறு முன்னர் சட்டத்தரணி யொருவருக்கு அத்தகைய ஆளுக்கான அணுக்கம் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(8) முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப் பட்டவாறாக அணுக்கத்தைத் தாமதிப்பதற்கான முடிபு, பொலிசுக் கண்காணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள அலுவலரொருவரினால் மீளாயப்படலாம் என்பதுடன், மீளாய்வின் பின்னரான அத்தகைய அலுவலரின் முடிவு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் பயனுறுத்தப் படுதலும் வேண்டும்.

(9) பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொரு வருக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ள சட்டத்தரணியொருவர் அத்தகைய அணுக்கத்தை பொறுப்பான முறையில் நல்லெண்ணத்துடன் பிரயோகித்தல் வேண்டுமென்பதுடன் நியாயமான முறையில் தேவைப்படக்கூடிய காலத்துக்கப்பால் அணுக்கக் காலப்பகுதியை அவசியமற்ற முறையில் அல்லது நியாயமற்ற முறையில் நீடித்தலுமாகாது.

(10) பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொரு வருக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ள சட்டத் தரணியொருவர், அவ்வாள் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் அவரது கூற்று பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் சமுகமாகி யிருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(11) அத்தகைய சட்டத்தரணி முறையீடுகளை அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்ப மொன்றைச் செய்யுமிடத்து, பொலிசு நிலையத் துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் பின்வருவன வற்றைச் செய்தல் வேண்டும்:-

(அ) அவ்வாறு செய்யப்பட்ட முறையீடுகளின் பதிவொன்றைச் செய்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய முறையீடுகளுக்கு உரிய கவனத்தைக் கொடுத்தல் ; அத்துடன்

(இ) பிணையை நாடுகின்ற அத்தகைய விண்ணப்பத்தின் வழங்குகை அலலது மறுப்புக்கான காரணங்களைப் பதிவுசெய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இரண்டு ஆண்டுகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நான்கு ஆண்டுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பொருள்கோடல்.

8அ. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, "சட்டத்துறைத் தலைமையதிபதி", "பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறு" மற்றும் "பொலிசு நிலையமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்" என்பன, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அச்சொல்லமைப்புகளுக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.